மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 26/2023 |
| பெயர் | : | செந்துார் பாண்டி (DW1) |
| த/பெ. | : | சண்முகதுரைப்பாண்டியன் |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of July 2026

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கு தபசில் சொத்து ஆறுமுகச்சாமி தேவருக்க கிரைய ஆவணம் 68/1976 மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி ராமசாமி என்பவரிடம் தான் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி தேவருக்கு, மகேஷ்ரி, 1 ம் பிரதிவாதி சண்முகதுரைப்பாண்டியன் 8, 9 பிரதிவாதிகள் வாரிசுகள். 1 ம் பிரதிவாதி சண்முக துரைப்பாண்டியன் எனது அப்பா என்றால் சரிதான், அவர் தற்போது இறந்து விட்டார். ஆறுமுகச்சாமி தேவரின் மனைவி ராஜரத்தினம் அம்மாள் என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி தேவர் 06.03.1976 அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து ஆவணங்கள் மூலமாக பதிவு செய்து கொடுக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவி ராஜரத்தினம் அம்மாள் 2018 ல் இறந்துவிட்டார் அவரும் எந்த வித ஆவணமும் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி தேவர் மற்றும் ராஜரத்தினம் அம்மாள் இறப்புக்கு பின் வாதியும் 1 ம் பிரதிவாதி எனது அப்பாவும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அனுபவம் செய்து வந்த சொத்தில் வேலி கருவேல மரங்களை வெட்டி விற்பனை செய்து அனைவரும் ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

2) வாதி தனது தந்தையார் பாத்தியப்பட்ட சொத்துககளை 1 ம் பிரதிவாதி போலி ஆவணங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு 2018 ம் ஆண்டு 8 ம் பிரதிவாதியை சந்தித்து பாகப்பிரிவினை கேட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி 8 ம் பிரதிவாதி சொத்தை பிரித்துக்கொடுக்க முடியாது என்று சொன்னதானால் வாதி நீதிமன்றத்திற்கு மூலமாக பாகப்பிரிவினை செய்வதற்கு ஆவணத்தை சரிபார்க்கம் போது 2017 ம் ஆண்டு 11 ம் பிரதிவாதி ஆனந்த சொரூபணுக்கு பொது அதிகார பத்திரம் மூலமாக பொது அதிகார பத்திரத்தில் பதிவு செய்து அதன் மூலம் 10 ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

3) அந்த பொது அதிகார ஆவணத்தில் காட்டக்கூடிய ஆவணங்கள் பட்டா மட்டும் தான் ஆவணமாக காட்டியிருக்கிறது என்று சொன்னால் எனக்கு நியாபகம் இல்லை. எனது

அப்பா 2019 ல் காலம் சென்றுவிட்டார். 10 ம்பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் காற்றாலை போடப்பட்டது என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதிக்கு கொடுக்கபட்ட கிரைய ஆவணத்தில் வாதியோ, 9 ம் பிரதிவாதியோ கையெழுத்து செய்யவில்லை. பொது அதிகார ஆவணத்தில் வாதியோ, 9 ம் பிரதிவாதியோ கையெழுத்து செய்யவில்லை என்றால் நியாபகம் இல்லை.

4) ராஜரத்தினம் அம்மாள் பெயரில் அ பதிவேடு மூலமாக  பதிவு செய்யப்பட்டது எனது தந்தையாரும். 8 ம் பிரதிவாதியும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றாால் சரியல்ல. எனது நிருபண வாக்குமுலததில் தாக்கல் செய்த ஆவணங்கள் போலியாக உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

5) ஆறுமுகச்சாமி தேவரின் வாரிசுகளான வாதியையும். 9 ம் பிரதிவாதியையும் சேர்க்காமல் பதிவு செய்யப்பட்ட பொது ஆவண்ங்கள் மற்றும் கிரைய  ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கத்ல்ல என்றால் சரியல்ல. வாதியின் தந்தையார் ஆறுமுகச்சாமி எந்த ஆவணங்களும் இல்லாமலும் இறந்துவிட்டாதல்.  வாதியின் தந்தையார் சொத்தில் வாதிக்க 4 ல் 1 பங்கு உரிமை இருக்கிறது என்றால் இல்லை.

6) 8 ம்பிரதிவாதியோ 9 ம் பிரதிவாதியோ இந்த வழக்கில் ஆஜராகவில்லை என எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் ராஜரத்தினம்மாள் வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என இந்த வழக்குகாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் தாக்கல் செய்த பட்டாவோ,. அ பதிவேடோ தனது தந்தையார் சொத்தில் வாதிக்கு உள்ள உரிமை பட்டாக்கள் மற்றும் அ பதிவேடோ மூலமாக கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும் வாதிக்கு 4 ல் 1 பங்கு வாதிக்கு கிடைக்ககுடியது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்ட்ட எதிர் வழக்குரையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- Tr.A.Dharanidharan
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.